ஓலை 43 | ஓசை 148 | ஜூலை 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முகமும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்.**

ஒருவனுக்கு பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை,
தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததில் தன் விருப்பத்தை செலுத்துதல் ஆகும்.

**Translation:**

'Mid follies chiefest folly is to fix your love
On deeds which to
your station unbefitting prove.

**Explanation:**

The greatest folly is that
which leads one to take
delight in doing what is forbidden.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்

எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்
சொல்லாலும் செயலாலும் திடமாக வேண்டும்
நில்லாமல் நிறுத்தாமல் முயல வேண்டும்
நிலைபேறு உலகினில் பெறுதல் வேண்டும்

கல்லாரும் கற்றாரும் சேர்தல் வேண்டும்
கல்விதனைக் கலங்காமல் கற்க வேண்டும்
துள்ளாமல் எந்நாளும் பணிவு வேண்டும்
தள்ளாத வயதினிலும் உழைக்க வேண்டும்

பொல்லாத குணங்கள் அழிதல் வேண்டும்
குள்ள மனங்களும் குறைதல் வேண்டும்
தெள்ளத் தெளிவான பேச்சு வேண்டும்
தேசமெங்கிலும் கருணை ஓங்க வேண்டும்

எல்லாரும் எல்லார்க்கும் உதவ வேண்டும்
இல்லாமை இல்லாத பூமி வேண்டும்
நல்லாரே தீயாரைத் திருத்தல் வேண்டும்
நானிலத்தில் நன்மைகள் விளைய வேண்டும்



கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

ஒற்றை வார்த்தையதன்
அழகிய அர்த்தம் புரிகிறதா
வாழும் நிலத்தாலன்றி நாம்
குலத்தால் ஒன்றே புரிகிறதா?

இட்டார் உலகில் என்றும்
உயர் குலமே புரிகிறதா
இடாதோர் என்றும்
இழி குலமே புரிகிறதா?

இது நம் ஔவை கூறிய
நல்வழி புரிகிறதா
அரசனும் ஆண்டியும்
பிறப்பால் ஒன்றே புரிகிறதா?

உதிரம் உனதும் எனதும்
நிறமது ஒன்றே புரிகிறதா
அறியாமை ஒன்றே
இன்னல் வளர்க்கும் புரிகிறதா?



சாதியிரண்டே அஃது
சான்றோர் வாக்கு புரிகிறதா
குடியும் கோனும் குலத்தால்
ஒன்றே புரிகிறதா?

உயர்குலம் தாழ்குலம்
பிரித்திடல் இழிசெயல் புரிகிறதா
பிறப்பால் நீயும் நானும்
ஓர் இனமே புரிகிறதா?

இறப்பின் பின்னே ஆறடி நிலமே
உனக்கும் எனக்கும் புரிகிறதா
நிலத்தால் அன்றி உறவால்
நீயும் நானும் ஓரினம் புரிகிறதா?

வேண்டாம் பிளவு
இது குறுகிய உலகு
உறவே புரிகிறதா.?

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# கலித்தொகை

மனையில் காணா மடவரலைத் தேடி
மனையகம் விட்டு கிளம்பினாள் செவிலித்தாய்.
விரிகதிர் காய,வெம்பரல் நிறை பாலையில்
விழிநீரோடு மகளைத் தேடி அலைபாயும் கண்கள்.
முக்கோலோடு,கரகமும்,நிழற்குடை ஏந்திய
எவ்வுயிர்க்கும் தீங்குசெய்யா அந்தணரோ ,எதிரே.
என்மகளை,பிறர் மகனோடு கண்டீராவென
பித்து பிடித்தாற் போல் வினவ,
அருஞ்சுரமதில் ஆணெழில் அண்ணலை
மாணிழை மடவரலோடு கண்டேன்.
மாணிழை மடவரலின் தாயோ,நீங்கள்.
மலையிடைப் பிறந்த மணக்கும் சந்தனம்
அலையிடைப் பிறக்கும் எழில் முத்தம்
யாழிடைப் பிறக்கும் நல்லிசை யாவும்
மனையிடை வாழ்வோர்க்கே உதவும் அன்றோ!
உன் மகளுக்கும்,உனக்கும் உறவு அத்தன்மைத்தே.
கற்போடு அவள் சென்ற வழி அறவழி தானே.
நீ அவளைத் தேடிப்பிரித்தல் சரியல்லவே!
உன் மகளின் வாழ்க்கை சிறந்திட
உன்னத வழியன்றோ,அவள் தேடியது.
நன்றே சென்றிடு,நீ திரும்பி !
என்றே கூறிச் சென்றார் அத் துறவி.




கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# மாட்டு வண்டி

மாட்டு வண்டி சொல்லும் பாடம்
மகத்தானது மதிப்பில்லாதது
மரத்தால் செய்தவண்டி
மனிதனுக்கு கற்பிப்பதிதுவே
வண்டியில் பூட்டும்மாடுகள்
வடதிசை தென்திசையானால்
வண்டிஓடாது தடுமாறும்
வாழ்க்கையிலும் தம்பதியர்
வழிக்கொருவராகிப் போனால்
வருத்தமே வாழ்க்கையாகும்
வண்டிச்சக்கரத்தில் ஒட்டும்
சருகாயினும் மேலேவந்திடும்
அடுத்தநொடியிலே கீழேயாகும்
நிலையற்ற உலகத்திலே
நிரந்தரம் என்பது எதுவுமில்லை
அத்தனை. பெரியவண்டி சிறு
அச்சாணியையே நம்பியிருக்க
அற்பம் ஏதுமில்லை இவ்வுலகிலே
அளவுக்கதிகமான பாரம் ஏற
அச்சாணி முறிந்து வண்டியேயாடும்
அளவில்லாகவலையும்பெருமையும்
அசைத்துவிடும் வாழ்க்கையை.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# மதுவை ஒழிப்போம்

## மதுவை ஒழிப்போம் மாண்புள்ள சமுதாயம் படைப்போம்

மது என்ற மடமையில் தினம் மூழ்கி
குடும்ப மனங்களை கொள்ளும் மதியிழந்த மாந்தர்களே

மங்கையை மதிக்காமல் இழிவு செய்யும்
மாமன்றம் தந்த சட்டத்தின் குற்றவாளிகளே

பூக்கடையாக மணம் வீசும் வாழ்க்கையை
சாக்கடையாக மாற்றி சங்கடம் தருபவர்களே

சொர்க்கத்தை தேடி நரகத்தில் விழுந்து
பொன்னான உடலை மண்ணில் புதைப்பவர்களே

கவனமாய் இருங்கள் மது காத்திருந்து கொள்ளும்
அலட்சியம் செய்யாதீர் ஆழ்புதைக்குள் தள்ளும்

அரசின் அலட்சியமும் , வருமானம் பெருக்கமும்
மக்களின் வாழ்க்கையை மடிய செய்கிறது

தடுக்க நினைக்கும் அரசியல் சட்டம்
விழாக்காலங்களின் போடுகிறது வருமானத் திட்டம்




சமூகத்தை கெடுக்கும் பொறுப்பற்ற குற்றவாளிகள்
மதுவினை விற்கும் மாண்புமிகு அமைச்சர் என்பேன்

மதுவை ஒழித்திட உறுதி ஏற்போம்
மது இல்லா சமுதாயம் வரவேற்போம்

கவிஞர் ஜெ.சிவக்குமார்,அருளவாடி

# அன்புசெய்

## இன்னிசை கலிவெண்பா

கொட்டிக் கிடக்குதே குன்றென அன்புமே
இட்டுச்செல் எங்கும் எழிலுடன் நீயுமே
சிந்திடும் புன்னகை சீரமைப்பு செய்யட்டும்
சிந்திய கண்ணீர் சிதைந்தே மறையட்டும்
வள்ளலாய் நாமுமே வாழலாம் பூமியில்
அள்ளியள்ளி அன்பை அளித்திடும் போதிலே
அன்பென்ற ஒன்றும் அகத்துள் விளைந்திட
என்றுமே பூத்திடும் இன்பமும் இன்பமாய்
யாருக்குத் தானில்லை இன்னலின் தொல்லையே
பாருக்குள் தேடிட பற்றிடும் பித்துமே
செல்லும் வரையில் சிறப்புடன் வாழ்வதெனின்
செல்வமாய் அன்பினை சேர்த்திடு தந்தே
குணமும் மனமும் குறையா திருக்க
மணமும் கமலும் மனத்தில் நினைக்க
அகத்துள் அமைப்போம் அதுபோலே வாழ்வை
மகிழ்வை தருவிக்கும் மாசிலா உள்ளம்
கிடைத்திட வேண்டியே கேள்



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# தேயராணி

என் வாழ்வில்
வந்த தேவதையே.
என் மனம்
மகிழ்ந்தது உன் நட்பால்;
ஆண்பால் பெண்பால்
மாற்றமிருந்தும்.
நட்பால்
இணைகிறோம்.

என் வாழ்வின் வசந்தம்
நீ தோழியானது.
என் மன வசந்தம்
உன்னோடு உரையாடுகையில்.
பூக்கள் பூக்கும் ஓசை
உன் குரலோசை.
என் தாகம் தீர்க்கும்
உன் அன்பு.

எனது அறியாமையை அழிக்கும்
உனது கோபம்.
எனை உன் வசப்படுத்தும்
உன் நேசம்.
நான் பெற்ற வரம்
நீயல்லவா.

உன்னோடு நான்
பேசாது கடந்த நொடிகள்
மீண்டும் மீள வேண்டும்
வரம் கேட்கிறேன்.

உன்னிடம் யாசிக்கிறேன்
எனை அறிந்தவளே.
ஆசுவாசமதை தந்து
என் சுவாசத்தை
நீளச் செய்யடி.

கவிஞர் மு.அமானுல்லாஹ் பாகவி,செங்குன்றம்

# நம்பிக்கை

உடன் வரும்
பறவைகளுக்கு
பயத்தை
உண்டு பண்ணாமல்
கொஞ்ச தூரம்,
இன்னும்
கொஞ்ச தூரம் எனச்
சொல்லிச் சொல்லியே
பெருங்கடலையும்
துச்சமாய்க் கடக்கச்
செய்கிறது
வழிநடத்தும்
தலைமைப் பறவை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# ஒருதலைக் காதல்

உண்மையான காதல்
ஒருதலைக் காதல்
நல்லக் காதல்
"கள்ளக் காதல்"

காதல் பலவிதம்
காதலர்களும் புதுவிதம்
எமக்கு தந்த
ஒருதலைக் காதல்

உள்ளத்தில் படர்ந்து
உதிரத்தில் கலந்து
இதயத்தில் மொட்டாக
இறுதிவரை மலராமல்.

மனதைக் கொல்லும்
மந்திர மொழி
மாயங்கள் அறியாத
மௌனத்தின் ஒளி.

ஊமையின் கனவாக
உணர்வும் ஊனமாக
நடமாடும் பிணமாக
நாள்களை நகர்த்தி.

ரகசியமாக ரசித்ததை
கவிதையாக வடித்து
பிரசவிக்கத் தவிக்கும்
காகிதத்தைப் புதைத்து.

வாழத் தெரியாமல்
வாழ்ந்த புன்னியர்கள்
காலத்தில் அழியாத
கண்ணியமான கன்னியர்கள்.

ஆனால் இன்றோ
காதலின் நிலை
கட்டிலுக்காக உறவாடும்
காமப் பித்தர்கள்.



காதல் நாடகமாடும்
போலி வேடதாரிகள்
அந்தரங்க லீலைகளை
அரங்கேற்றம் செய்ய.

காவல் கூடாரமாக்கி
காதலர்களாக மாறுவது
ஈனப் பிறவிகளின்
கேடுகெட்ட செயலென்பேன்.

செய்ததவறை மறைக்க
இருட்டறையில் தீண்டிய
இச்சைத் தாகத்தை
பொதுவெளியில் திரையிடும்.

கொச்சை உறவுகளின்
மானமில்ல உணர்வுகளை
பச்சைத் தமிழில்
பார்த்தும் கடந்தேன்.

இதைவிட மேல்
ஒருதலை காதலென்பேன்
ஆசைகளை யடக்கி
அன்பை ஒடுக்கி.

மனதில் வாழும்
மகத்தான காதல்
ஒருதலைக் காதல்
புனித மென்பேன்.

கவிஞர் லா.பெனிஸ் தமிழ் மருத்துவர்

# பாதங்களுக்கு இடையே எல்லைக்கோடு

இருவரின்
எல்லை ஒப்பந்தத்தில்
கைக்கொடுத்த
வரப்பொன்று
எல்லோர் காலிலும் மிதிபடுகிறது

இடமளிக்க மறுத்தவனுக்கு
கடைசியாக நீரைப் பாய்ச்சுகிறது
பச்சைபசேல் வரப்பொன்று.

புல்லும் நீளவில்லை
புது தடங்களும் மீறவில்லை
புத்தி சற்று நீண்டு மறைந்து
மடங்கியோடுகிறது

நீ வழியாக நினைத்து கடந்தால்
பசுமையின் வண்ணத்தையும்
தலைகணமாய் நடந்தால்
சேற்றின் அருமையை காமித்துவிடும்
நீட்டி நிமிர்த்திய
புல் படர்ந்த வரப்பொன்று.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்,நாகப்பட்டினம்

# வீழ்வேனென்று நினைத்தாயோ


வீழ்வேனென்று நினைத்தாயோ
வீச்சுடன் பறந்திடுவேனே
வீரனுக்கு தோல்வியும்
வெற்றியே புரியாதோ?
முடங்கிக் கிடந்திடும்
முடவனல்லவே நான்
உழைப்பின் உயர்வில்
உலகையும் மாற்றிடுவேனே
பாதையில்லா பாலையிலும்
பாதச்சுவடுகள் பதித்திங்கே
பாரெல்லாம் அன்பினை
பாராட்டிடவே விதைத்திடுவேனே.
தடைகளைத் தாண்டியே
தன்னம்பிக்கை தாண்டவமாடிட
விண்ணையும் தாண்டுவேனே
விண்ணில் பறந்திடுவேனே
புயலுக்கு முன்னாலே
புனையும் அமைதியாய்
உள்ளுக்குள்ளே உயர்வாகவே
உழுதிங்கே உன்னதனாவேனே



கவிஞர் இரஜகைநிலவன்,மும்பை

# திறந்த புத்தகம் காமராசர்

விருது நகரில் பிறந்த மாணிக்கமே
மக்களை எல்லாம் வியக்க வைத்த மரகதமே
எளிமையின் சிகரமாய் விளங்கிய இரத்தினமே
ஏற்றத்தை எல்லாம் உன்னிடம் கண்டேன்
மதிய உணவு அளித்த மகானே
அணைகள் எல்லாம் கட்டி அகிலத்தை
அசர வைத்த வள்ளலே
ஏழைகளின் துயரை துடைத்த செல்வனே
தமிழன்னைக்கு மகுடம் சூட்டிய தங்கமே
தன்னை மறந்து நாட்டுக்காக வாழ்ந்த உத்தமரே
பயிர்களை எல்லாம் செழிக்க வைத்த தங்கமே
தமிழ் நாட்டை கல்வியில் சிறக்க வைத்த முதல்வரே
தென்னாட்டு காந்தியே
கதராடை அணிந்து சிறப்பு செய்தாயே
பகட்டான வாழ்க்கைக்கு இடம் தராதவரே
ஆடையே போல உள்ளமும் தூய்மையே
உழைப்பால் உயர்ந்து நாட்டுக்காக வாழ்ந்தவர்
மக்களை இவரது உயிர் மூச்சு
இறுதி மூச்சு உள்ளவரை
ஊருக்காக உழைத்த மகானும் இவரே
அழகு தமிழால் பேசி அனைவரையும் கவர்ந்தவர்
கல்லாமையை இல்லாது செய்து கல்வியில்
சிறந்த நாடு தமிழ்நாடு
என்று உணர்த்தியவர்
இவரை போல் ஒப்பற்ற தலைவரை
இனி தேடினாலும் கிடைக்காது
வாழ்க உம் புகழ் வளர்க கல்வி



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# ஏனோ?

உன்னை விட்டு
பிரியும் வேளையில்
என்னை நீ தடுக்காததேனோ
உன் இதயத்தின் காயங்களை
நான் கண்டுகொள்ளாமல்
சென்றதினால் தானோ?

உன்னை விட்டு
விலக விலக உன் இருப்பை
நான் அறிய மறந்தேனோ?

இன்று
உன்னைத் தேடுகிறது
என் கண்கள்
எங்கே சென்றாய் நீ?

இன்று நீ
என்னுடையவள்
இல்லாமல் போனதேனோ?

நீயின்றி
இவ்வாழ்வில் இனி
என்ன செய்வேன் நான்
அன்று உன் காதலை
நான் உணராததேனோ?

பூவே நீயின்றி
என் மனம் இன்று
வறண்ட பாலைவனம்
ஆனதேனோ?



அகர முதல

கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ,விருதுநகர்

# சொல்ல மறந்த கதை

சொல்ல வேண்டிய
கதைகளோ ஆயிரம் இருந்திட

சொல்ல முடியா வேதனைகளும்
நெஞ்சிலே நிலை கொண்டிட

சொல்லத் துடிக்கின்ற
இதயங்களும் தவம் கிடந்திட

சொல்லிச் சென்ற
வார்த்தைக்கும் சம நீதி கிடைத்திட

சொல்ல மறந்த கதை மட்டும்
நெஞ்சுக்குள்ளே பொக்கிசமாய்
ஒளிந்து கிடந்திட

சொல்லாப் பொக்கிசத்தின்
நினைவு மட்டும்
நெஞ்சினிலே பசுமையாய் வாழ்ந்திடுமே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# காயத்தின் பின் வரலாறு

காயத்தின் பின் காலத்தில்
கலங்குதே கண்ணீர் கானலுடன்
போட்டியின்றி பொறாமையில்
புன்னகை இன்றி பூவும்
மலர மறுக்க.

பலர் வாழ்க்கையில்
வலிகளும் வழக்குகளாக
வாழ்க்கையின் வித்துக்களாக
தேடலில் பல பயணம்
தேடுதலில் தினம்
பலன் இன்றி பாகுபட்டு
பரந்த உலகில்
பயணமே மருந்தாகி போய்
விருந்து இல்லாமல்
இன்றைய விஞ்ஞான உலகில்
விதிவிலக்காய்
காதலும் காலமும்
போட்டி போட
போர்க்கள நாடு ஒன்று
களமாகி போனது நம் மனம்
விருந்தாகவா அல்லது மருந்தாகவா
என்று அறியாமல்
காயத்தின் பின் பல குறிப்புகளுடன்
நம் வரலாறு பேசுமே
ஒரு நாள்.



கவிஞர் ம.செல்லாஹ்,நுத்தப்பூர்

# பாதை மாறிய பயணம்

கரடு முரடான பாதை இதுவோ
கல் அடி சொல் அடிதானோ
கழட்டிட முடியாமல் கவலை ஒட்டுதோ
கல்லாகிப் போனது மனம் தானோ

தேர்ந்து எடுத்தது  கனவுப் பாதையோ
தேட்டத்தோடு தினம் போராட்டம் தானோ
தேடிப் பார்த்தது கிடைக்காமல் போனதோ
தேடலில்  வெந்தது மனம் தானோ

எடுத்து வைத்த கால் தடங்கலோ
எட்டி மிதித்து காலடி பட்டதோ
எட்டா தூரத்தில் கனவும் சென்றதோ
எட்டிப் பிடிக்க முடியாமல்  வேதனையோ

கடைசியில் வந்தது நினைக்காத ஒன்றோ
கடந்து போக வழிகள் சொன்னதோ
கனவை திறந்த புது பாதையோ
கண்ணீரோடு விதியை ஏற்றுக் கொண்டதோ

கண்ணீரும் முத்தாகி வெற்றி வந்ததோ
கடலாக வெற்றி கவலையை துரத்தியதோ

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# இடன் அறிதல்

**அதிகாரம் : 50**




பகைமுடிக்கப் பக்குவமாய்
இடங்கண்டு பின்னே.
வலியறிந்து செயல்முடித்தல்
வெற்றிக்கு வழியாம்.

மாறுகொண்ட வலியோரும்
சேர்ந்திருக்கும் அரணாலே.
நேருகின்ற வெற்றிவாகை
நற்பலனைக் கொடுக்குமாம்.

பக்குவமான இடமறிந்து
பதுங்கிப் போரிட்டால்.
பகைவர்க்கு எதிர்நிற்க
ஆற்றாரும் வலிகொண்டுவெல்வராம்.

தகுமிடம் ஆய்ந்தறிந்து
அகத்துள்ளொழிந்து போரிட.
அவரைவெல்ல எண்ணும்பகையோர்
தன்னெண்ணம் இழப்பராம்.

நிரைநீருள் வலிகொண்டு
உயிர்கொல்லும் முதலையும்.
கரைவந்தால் வலுவிழந்து
எதிரியால் கொல்லப்படுமாம்.

தரையோடும் பெருந்தேர்கள்
கடலோட இயலுமோ?
கடலோடும் மாக்கப்பல்
தரைநடக்கத் தகுமோ?

ஆக்கச்செயல் ஆய்ந்தறிந்து
தக்கவிடம் பொருந்திச்செய்யும்.
ஆட்களுக்கு மனவலிகாட்டிலும்
பிறதுணை வேண்டுவதிலையாம்.

குறும்படையோனும் தன்வலியை
தகுமிடத்தில் செலுத்தித்தாக்கிட.
பெரும்படையோனும் தன்முனைப்பில்
தோல்வி கொண்டோடுவான்.

தொடவியலா அரணும்
சிறப்புமிலாதவராயினும் அத்தகை.
பகையோன் தங்குமிடமடைந்து
தாக்கிவெல்லல் அரிதாம்.

வேலேந்திய வீரனையுமேந்தும்
பல்லேந்திய யானையையும்.
சேற்றிலே காலாழ்ந்திட்டால்
சிறுநரியும் கொன்றுபோடுமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# ஹைக்கூ

நீளும் பயணம்
பிரியா விடையளிக்கிறது
அந்தியில் மறையும் சூரியன்.

அடர்ந்த வனம்
உள்நுழைந்ததும் தொலைகிறது
மனதிலிருக்கும் துயரம்.

துருப்பிடித்த நிலையில்
அப்பாவின் மிதிவண்டி
மனதில் பசுமையாய் நினைவுகள்.

தூண்டிலில் மீன்
தாழ்வாக பறக்கிறது
இரை தேடும் நாரை.

பூக்களைப் பறிக்கும் குழந்தை
பின்தொடர்ந்து வருகிறது
வண்ணத்துப்பூச்சி.



அகர முதல

கவிஞர் ச.கோபிநாத்,சேலம்

# சமையல்

மையல் கொண்டு
சமையல் செய்யும் தையலே!
அன்பாக சமைத்துப் பரிமாறி
வயிற்றை நிறைத்து
மனம் கவரும் மங்கையரே!
ஆண்டாண்டு காலமாக
ஆசையோடு களமிறங்கி
கரண்டி பிடித்தாலும்
பெயரை தட்டிக் கொண்டு
போனதென்னவோ
நளச் சக்கரவர்த்தி தான்.



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# புன்னகை

சுத்தமான காற்று
முப்பதடி ஆழத்தில் நிலத்தடிநீர்
நல்ல தண்ணீர் இணைப்பு
அருகில் மருத்துவமனை
பள்ளி கல்லூரிகள்
அகலமான தார்சாலை வசதி
சிறுவர் விளையாட பூங்கா
நீச்சல்குளம் உடற்பயிற்சிக்கூடம்
இருபத்தி நாலுமணி நேரமும் காவலாளிகள்
சுற்றிலும் கண்காணிப்பு கேமராவென
அனைத்து சகலவசதிகளும் ஒற்றை ஆவணத்தால்
எளிய தவணைமுறையில் அரங்கேற

ஆயிரம் உறவுகளால்
அன்பினை கொண்டாடிய ஊரைவிட்டு
வனத்தில் முளைத்த வீட்டுமனையின்
கான்கிரீட் கனவு இல்ல
சுவர்களுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கும்
ஈரமில்லா இதயங்களின் திறக்காத கதவுகளுக்கு முன்நின்று
வழியெங்கும் ஆவலோடு சிறுபிள்ளையாய் தேடுகிறேன்

மதிப்புக்கூட்டப்பட்ட
நவீன வாழ்வினை
எந்திரமாகவே வாழும் எல்லோரிடமும்
காணக் கிடைக்காத
சிறுபுன்னகையை.



கவிஞர் கோவை ஆனந்தன்,குமாரபாளையம்,கிணத்துக்கடவு

# அகத்தின் அழகு

உள்ளத்தில் உள்ளதெல்லாம்
உண்மையின் நெருக்கமென்றால்
முகமும் பொழிவடைந்து மின்னிடுமே.
காணும் உமிரிடத்தே கனிவு மனம்
நீளுமென்றால்
பேணும் உறவிலெல்லாம்
ஆனந்தம் நிலைத்திடுமே.
உள்ளொன்று வைத்து
புறம் பேசாத தருணங்களில்
நல்லவை கூடிவந்து அகத்தையும்
செழிப்பாக்கிடுமே.
வஞ்சக நெஞ்சகத்தில் நஞ்சென
எண்ணங்கள் உதிக்கையிலே
வார்த்தைகள் தடித்தும்
உதடுகள் துடித்தும்
கோரமென மாறிடும் முகமுமே.
பகையும் சினமும் பழிவாங்கலும்
இதயத்தில் புதையப் புதைய
உறங்கா முகமும் காட்டிக்கொடுக்குமே.
உயர்வான எண்ணங்களில்
உள்ளத்தை நிரப்பினால்
புன்னகை மலரும் முகத்தில் புத்துணர்வாய்
பொழிவுகள் நிலைத்திடுமே.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# திருமணமாம் திருமணம்!

இருமனம் இணைந்து திருமணம் கண்டால்
அருமையது என்று போற்றலாம் நாமனைவரும்;
ஒருதலைக் காதல் என்றும் உருப்படவிடாது;
ஒருமித்தக் காதல் நல்லறமாகும் நானிலமெங்குமே!

"அறமெனப் பட்டதே இல்லறம் அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"என்று
சொல்லுரைத்த வள்ளுவனார் வாழ்ந்த காலமதில்
பல்லிளித்து வாழ்ந்த பலவீனமுடை ஆண்களை
பொருளுக்காய் மகிழ்விக்க வாழ்ந்தனர் வரைவின்மகளிர்!



மனைவிக்கு திருமணம் செய்துவைத்த கணவன்
உ.பி., மாநிலம் மிர்சாபூரில் ஒருவர் தனது மனைவியை, அவரது காதலனுக்கு திருமணம் செய்து வைத்த சம்பவம் நடந்துள்ளது. தினேஷ், ரோஸ் என்பவர்களுக்கு ஓராண்... திருமணம் நடந்தது. ... பக்கத்து வீட்டில் வசிக்கும் ...த்து வந்துள்ளார். இவர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்துள்ளனர். இதை தெரிந்து கொண்ட தினேஷ், வீட்டில் பேசி தன் மனைவியை ராகுலுக்கு திருமணம் செய்துவைத்தார்.
7m ago

சரியான அணுகுமுறை

திருமணத்தை மறைத்து காதல்: விபரீதம்!
கர்நாடக மாநிலம் பெங்களூருவில் காதலர்கள் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. குருபிரசாத் ஏற்கனவே தனக்கு திருமணம் ஆனதை மறைத்து பவித்ராவை காதலித்துள்ளார். இந்த விவகாரம் தெரியவர மன உளைச்சலில் இருந்த பவித்ரா தனது வீட்டில் தற்கொலை செய்துகொண்டார். காதலி இறந்த மறுநாளே குருபிரசாத்தும் தற்கொலை செய்துகொண்டது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.
2:02 PM

தவறான அணுகுமுறை.

கட்டியவளை ஏமாற்றி காமத்தால் சேராவிடம்
கண்டு வந்தவரைத் தன்னைத் தீண்டவிடாது
திருநீலக்கண்டம் சொல்லி தடுத்துத் திருத்திய
பெண்ணில் நல்லாள் வாழ்ந்த திருநாட்டில்
பெண்களுள்சிலரும் ஆண்களைப்போல இன்றுகண்டபடி பொய்யுரைத்து
பித்தலாட்டம் புரிகின்றார் தாமெண்ணியபடி வாழ!

அண்டைமாநிலம் கருநாடகத்தில் ஆடவனொருவன் தன்கைபிடித்தாள்
அறியாவண்ணம் காதலியொருத்தியு டனவளும் தன்நிஜமறியா
வண்ணம் கணவனாய் வாழ்ந்திடவந்த உண்மையறிந்த
வல்லியவள் தற்கொலை செய்திட அதுவவனுக்கு
வில்லியாகவீழ்ந்தா னவனுமவ்விதமே யவன்மனையா ளானவள்
அதைஎன்னவெண யெண்ணியிருப்பாள், அந்தகபோதியை நினைத்துமே!

அயல்மாநிலமாம் உத்திரபிரதே சம்மிர்சா பூரில்
அன்புடன் தான்கைபிடித்த பெண்ணவள் தன்னைத்
திருமணம் செய்யுமுன் காதலித்தவனை இப்போதும்
ஆருயிராய்க் கருதிக்காதலிப்பது அறிந்தாத்திரம் கொள்ளாதுதன்
அருமையுறவுக ளுடன்பேசி திருமணத்தால் தன்னவள்
ஆனவளை யவள்காதலனின் கரத்தில்சேர்ப்பித்து மகிழ்ந்தானே!

கருநாடக மனிதன் போலொரு வாழ்விங்கு
கனவிலும் வாழாதீர்; உத்திரபிரதே சவிளைஞனைப்
போலொரு வாழ்வுவாழ நேர்ந்தாலதற்கு வருந்தாதீர்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# இரவுக்குள் நெளியும் ஆன்மா

அம்மா
அம்மாயென்று
கத்தி கூப்பாடு
போட்டு என் அம்மாவை
என் கனவுக்குள்
வாயென்று அழைக்கிறேன்
நீண்ட நேரமாகியும்
அம்மாவும் வரவில்லை
எனக்குள் எந்த
ஒரு தூக்கமும் நிகழவில்லை
துக்கம் தலைக்கேறி
கண்ணீரோடு
சாய்ந்தபடியே படுத்திருக்கிறேன்
அம்மாவை
கடைசியாக கிடத்தப்பட்டிருந்த
அந்த கிழக்கு நோக்கிய
திசையை
பார்த்தவாறே.

தன் குஞ்சு
பறவைக்கென
இறை தேடி
என் வீடு வந்த
அந்த தாய் பறவைக்கும்
என் அம்மாவுக்கும்
ஒத்த வயது
இருக்குமோ யென்று
யென்னியவாறு
வாசல் நோக்கி
பார்வையை படரவிடுகிறேன்
இன்னும் தனக்கான
இறையோடு
தன் கூடு வந்து சேரவில்லை
வேலை தேடி
தூரம் பறந்தோடிய
தன்னுடைய அம்மாவின் உடல்.

கவிஞர் ச.சக்தி,பண்ருட்டி

# நடுவுநிலை

## நடுநிலை அதிகாரம் 12

பாரபட்சம் இன்றி அனைவரிடமும்
சமமாக இருப்பதே சிறந்ததாகும்
அவரே நடுநிலையாளர் ஆவார்

இவரது இச்சொல் அடுத்த தலைமுறைகளுக்கும்
சிறப்பு சேர்க்குமே
நன்மை என்றாலும்
நடுநிலையில் இருந்து  பிறழக் கூடாது

நடுநிலையுடன் செயல்படுபவரை
அவரின் உடல் அசைவிலும் கண்டு கொள்ளலாம்

சான்றோர்க்கு அழகு நல்லதும் கெட்டதும்
நிலையற்றது என்று நினைப்பது
நடுவநிலை தவறினால்  அழிவு நேரும் என்பதை
உணர்ந்து செயல்பட வேண்டும்

நடுவுநிலை செயலால் வறுமையில் இருந்தாலும்
உலகம் அவர்களை இழிவாக எண்ணாது

தராசின் முள் போல் இருப்போர் சான்றோர்
நடுநிலை வகிப்போரின்
சொல்லிலும் செயலிலும் குறை இருக்காதே




தனக்குத் தேவை என அறிந்து
பொருளை விற்பனை செய்ய வேண்டும் வியாபாரிகள்

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# அழகானவரே!

அன்பில் மலர்ந்த புன்னகையில் அழகு
ஆழ்கடலில நிறைந்த மனமும் அழகு
இதயம் துளைத்த உம் கவிச்சொற்களும் அழகே.
ஈன்றெடுத்த உன் இரண்டு முத்துக்களும் அழகோ அழகு
உறவுகளை நேசிக்கும உன்னதம் அழகு
ஊஞ்சல் கயிற்றில் உங்கள் அசைவுகள் அழகு
எதையும் வெல்லும் எண்ணம் அழகு
ஏழிசை மொழிகள் அழகு
ஐயம் தகர்த்த நெஞ்சம் அழகு
ஒளி பொருந்திய நிலவு முகமும் அழகுதான்
ஓடையில் தவழும பொற்பாதமும் அழகு
ஔவை தமிழில் நும் மழலை மொழி அழகு
தேடியதில் தெரிந்தது உன் நாமத்தின் பொருள்
அழகானவர் என்று
ஆய்ந்ததில் புரிந்தது அது உண்மை என்று



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு

# மௌன மொழிதல்கள்

வாலசைக்கும் அணிலின்
அவசர ஓசைகள்
புள்ளினத்தின் சப்த ஸ்வரங்கள்..
பசுமைபோர்த்திய இலைகளில் மழைத்துளிகள்
ஒவ்வொரு துளியிலும் ஆயிரம் விம்பங்கள்!

இத்தனையும் கண்டும் குளிராதா கண்கள்!
அத்தனை அழகையும்
மொத்தமாய் இரசிக்க முடியாமல் ஏனிந்த அமைதி!

என் மௌனத்தின் மொழிதல்களுக்கு
யாரும் கருத்தில் வந்தவாறு
வர்ணம் தீட்டிவிடாதீர்கள்.
கண்ணேறு சூனியத்தால்
கொன்று விடாதீர்கள்.

என் வரிகள் கட்புலனுக்கும்
செவிப்புலனுக்குமாய் மட்டுப்படுத்தவில்லை யென்பதை
யாரறிவாரிங்கு!

அறிந்தோர் அறிவார்.
என் மௌன மொழிதல்களை
குரல் நாண்களுக்கிடையில்.
கெட்டுப்போகாமல்
களஞ்சியப்படுத்தி வைத்துள்ளேன்
அவ்வப்போது அழகாய் வெளிவரும்.

அதுவரை
என் ஆழ்வரிகள் சில
இதயச் சுவரோரங்களில்
கால்நீட்டி சார்ந்திருக்கும்
கற்பனை மரநிழலைத் தலையணையாக்கி உறங்கும்.
நாளைய விடியலில் உற்சாகமாய் மீண்டெழும்!



கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# அசைவுகள்

அம்மா ஊட்டும்
பருப்புச்சோற்றின்
மணம் நினைவில்
இருக்கிறது!

அப்பா விரல்
பிடித்து நடை
பழகியநாள்களில்
நம்பிக்கை தெரிந்தது!

தாய் நிலத்தில்
குடும்பத்தோடு கூடி
வாழ்ந்த காலங்கள்
நெஞ்சில் உறைந்து
புலம் பெயர்ந்த
நிலத்தில் நினைவாக
நிற்கிறது!

கவிஞர் செ.தமிழ்நேயன்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# சோதனையே சாதனை

உனக்கொரு சோதனை வந்தால்
பொறுமை எனும் கவசம் தரித்து
இறை நம்பிக்கை எனும் கேடயம் ஏந்தி
அவற்றை வென்று விடு

அகர முதல



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை


# பயணங்கள்

எல்லா உயிரினங்களும் ஒரே இடத்தில்
வாழ்நாளை கழிப்பதில்லையே!
இடம் விட்டு இடம் போயே, தங்களின்
வாழ்வாதாரத்தை செம்மைப்படுத்தி கொள்கின்றன.
முக்கியமாக மனிதன் தன் ஆரம்ப
நாள் தொட்டே, படிப்பு, திருமணம்
போன்ற கால சுழற்சியிலேயே
அதனுடைய வாழ்நாளில் பெரும்பாலும்
பயணப்பட்டு கொண்டே இருக்கிறானே!
சிலர் வெளிநாடு மோகத்தால்
படித்தும், வேலை, திருமணம் என்று
நிரந்தரமாக தங்கி விடுகிறார்கள்.
அக்கால மனிதன் முதன் முதலில்
கால்நடையாக, பின் விலங்குகள் மீதும்
பின் இரண்டு சக்கர மாட்டு வண்டியும்
குதிரை வண்டியும் துரித கதியில் செல்ல தொடங்கினவே.
விஞ்ஞான வளர்ச்சியில், கப்பல், ஆகாய விமானம்
ரயில் வண்டி, பேருந்து, நான்கு சக்கர ஊர்தி
இரண்டு சக்கர வண்டியும் துரித கதியிலேயே
சென்றடைகின்றனவே!
அக்கால பயணத்தில் துரித செய்தி
அனுப்ப புறாக்களை பழக்கிவிட்டு
"புறா விடு தூதாக" அமைந்ததே!
விஞ்ஞானம் வளர வளர
மனிதனின் கண்டுபிடிப்பில்
அதிக வேகத்தோடு பயணப்பட்டு
பின் விபத்துக்குள்ளாகியும் போகிறார்களே!
உலகமும், ஏராளமான புகையினால்
மாசுபட்டுக் கொண்டே இருக்கிறதே!
மரங்கள் பல பல நடுவதன் மூலமும்
நெகிழிப் பொருட்களை பயன்படுத்தாமலும் இருந்தால் நாம்
பயணத்தால் நிறைய பயன் அடையலாமே!



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# நதி



தெரேசாவின்
முகச் சுருக்கங்களில்
தேசத்தின் நதி
அன்பை சுமந்தபடி

பீரங்கி சத்தங்களில்
சற்றே நிலைகுலைகிறது
மௌனங்களின்
சலசலப்புகள்

எதார்த்தமாக
விழும்
தோட்டாக்களின்
கழுவல்களில்

நதி
மூலங்கள்
இரத்தக்கரை
சுமந்தபடி

தெளிந்த நீரில்
விழுந்த கற்களால்
வளையங்கள்
தொடர்ந்தபடி

சாயமிட்டுக் கொள்ளா
சந்தோஷ காக்கை
நதிநீர் பருகியபடி
குனிய

கருமை இயல்பில்
அலங்காரமாய்
புகுத்தப்பட்ட
மயில் தோகை
நதியில் கணக்கிறது



நதி
வளைவுகளில்
கேள்விக்குறியாகி
சுழற்சிகளில்
குழம்புகிறது

இருப்பினும்
இயல்பு மாறா
பயணம் கொண்ட
நதி

இன்றும்
தெரேசாவின்
முகச்சுருக்கங்களோடு
தாய்மையின்
அன்பு சுமந்து
ஓடிக்கொண்டிருக்கிறது.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# நொறுக்கு தீனி

அ , ஆ சொல்லலாம்
அச்சு முறுக்கு தின்னலாம்.
இ , ஈ சொல்லலாம்
இனிப்பு மிட்டாய் தின்னலாம்.
உ , ஊ சொல்லலாம்
உளுந்தவடை தின்னலாம்.
எ, ஏ சொல்லலாம்
எள்ளுருண்டை தின்னலாம்.
ஐ , ஐ சொல்லலாம்
ஐஸ்க்ரீம் தின்னலாம்.
ஒ, ஓ சொல்லலாம்
ஓட்டவடை தின்னலாம்.
ஔ, ஔ சொல்லலாம்
ஔவை தமிழ் படிக்கலாம்.
ஃ, என்று சொல்லலாம்
அஃதே வழியில் நடக்கலாம்.
அம்மா செய்த பலகாரம்
அமிர்தமாய் இனித்திடும்.
பாட்டி செய்த பலகாரம்
பக்குவமாய் செரித்திடும்.
நொறுக்கு தீனிகள் பல உண்டு
நொறுங்க தின்றால் ஆயுள் கூட
நூறு உண்டு.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# முத்தம்

கண்ணீரில் தரும் முத்தமும் கரித்திடுமே!
காதலில் தரும் முத்தமும் காவியமே!
கிசுகிசுப்பான முத்தமும் கிளுகிளுப்பூட்டிடுமே!
கீர்த்தனை முத்தமும் கீதமாய் இசைத்திடுமே!
குழந்தையின் குறும்பு முத்தமும் குதூகலித்திடுமே!
கூச்சத்தில் முத்தமும் கூசிடுமே!
கெஞ்சிக் கொடுக்கும் முத்தமும் கொஞ்சிடுமே!
கேளாத முத்தமும் கேள்விகுறியாகிடுமே!

கையால் கொடுக்கும் முத்தமும் பறந்திடுமே!
கொச்சையான முத்தமும் கொதிக்க வைத்திடுமே,
கோபத்தில் முத்தமும் குறைத்திடுமே!
கௌரி பெண்ணின் முத்தமும்
கௌதாரியாக வானில் விரைந்திடுமே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# ஒற்றை தளிரும் ஆசாரமும்

ஒற்றை இலை பூமி உடைத்து
வானம் பார்க்க.
வீசிடும் தென்றலும்
வசந்த வாசம் சுவாசிக்க

வருணனும் பூமியின் கடன் தீர்க்க
கொட்டிடும் ஆசாரமும்
மண் தொட்டு கரைந்திட
துளிர் விடும் ஒற்றை தளிர் முளைக்க.

நிலவு மறைத்த கருமேகங்களும்
நடனமாடும் வகையிலே
மேளதாளத்திற்க்கு மட்டும் இன்னும்
பஞ்சமே இல்லையாம்.

வேரூன்றி முதல் பார்வையில்
ஞாலம் பார்வையிட
திவலையும் சட்டென நெற்றியிலே
முத்தம் பதித்தனவாம்.



அழகான காதலோ
தளிரும் துளியும் இடையில்
ஆனந்தமாய் ஆசையாசையாய்.
ஆரவாரமின்றி நிதானமாய்
நிசப்த மொழியில்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# ஹைக்கூ கவிதைகள்

1
குப்பை சேராத கோணிப்பை
சோர்ந்து போய் கிடக்கிறது
பொறுக்கும் சிறுவனின் வயிறு

2
வேரின் ஈரம்
வெளித்தெரிவதில்லை
தந்தையின் பரிவு

3
சிறுவனின் திறமை
தரையில் விரிகிறது
தவளை நிழல்

4
பெய்யும் மழை
பூமியை அழகு செய்கிறது
துளிர்க்கும் மரம்

5
கல்லூரியில் பெற்றான்
உச்சப் பெறுபேறு
இரவல்நூல் படித்தவன்

6
அசைந்தும் ஆடியும்
ஒத்திசைந்து கொள்கிறது
தென்றலோடு திரைச்சீலை

7
சாலை வாகனங்கள்
முன்னும் பின்னும் அசையும்
காற்றோடு நெகிழிப்பை

8
சலசலக்கும் நதி
பாய்ந்து ஓடி வருகிறது
இழந்த நாணலின் வாசம்

9
மோதுண்ட புகையிரதங்கள்
அவசரமாக நிறுத்தம் அடையும்
உயிர்களின் உலகப்பயணம்

10
நீரோடை
வளைந்தும் நெளிந்தும் அசையும்
கரையோரத்தில் நாணல்

11
கவிழ்த்த பானை
நன்றாகத் தெரியும்
பசித்த குழந்தையின் முகம்

12
பனங்காடு
வழிநெடுகிலும் இருக்கும்
தூக்கணாங்குருவிக் கூடுகள்

13
முரட்டுத் தோற்றம்
கிராமத்தில் அதிகமாக
வெள்ளந்தி அன்பு

14
நண்பனைக் கண்டதும்
மறைந்து போய் விடுகிறது
வயதின் மூப்பு

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர் இலங்கை

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# ஆ...சனம்

தரையில் அமர்வதே ஆசனமாச்சு!
தரித்திரம் எல்லாம் சேர்ந்தாச்சு!
சைக்கிள் ஓட்டுவதே சாதனையாச்சு!
நடப்பது கூட அதில் சேர்ந்தாச்சு!

குழவியை தூக்க வண்டி வந்தாச்சு!
குமரியிலேயே கிழவி ஆகியாச்சு!
பிள்ளை பெறுவது சாதனை ஆயாச்சு!
செயற்கை கருவுக்கு வீதிக்கு
நாலு வியாபாரி உண்டாச்சு!

மூச்சு விடவே மெஷின் வந்தாச்சு!
துவைப்பதற்கென்ன கேட்கவா போச்சு!
வீட்டு வேலைகள் கஷ்டமா போச்சு!
நாயை இழுத்துகிட்டு அலைவது பேஷனா போச்சு!



படி ஏறுவதே பாரமா போச்சு!
இதிலே மலை ஏற எங்கே ஆச்சு?
உண்டு உறங்கி உடம்பை வளர்த்தாச்சு!
ஊரில் உள்ள மருத்துவரை எல்லாம் பார்த்தாச்சு!

மருத்துவர்களின் பை வீங்கி போச்சு!
அவருக்கும் மாத்திரை எழுதி ஆச்சு!
மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
வள்ளுவர் சொன்னதெல்லாம் மறந்தாச்சு!

மாய்மாலம் பேசி பொழுது போக்கி ஆச்சு!
உட்காரத்தான் முடியுமென்றால் எழு!
எழத்தான் முடியுமென்றால் நட!
நடக்கத்தான் முடியுமென்றால் ஓடு!
ஓடத்தான் முடியுமென்றால் பற!

வியாதி ஏதும் இல்லை விளையாடு!
உயிர் ஒன்றும் போகாது நீந்து!
பசித்தால் அருந்து அதுவே மருந்து!
விருந்தை மற விருப்பமானதை மறு!

இனியெல்லாம் சுகமே!
இரும்பு கூட கரையுமே!
உடல் எஃகென உறுதியாகுமே!
நோயெல்லாம் மிரண்டு ஓடுமே!

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

அகர முதல

# புகழ் ஒரு பூதக்கண்ணாடி



அறிவின் திறமை
அனைத்தையும் ஆளும்
வெறியோடு இலக்கை
வென்றித் தூண்டும்

சிந்தனைத் தெளிவு
சிறப்பைத் தருமே
நிந்தனை கொண்டு
நித்தமும் பலமாக்கும்

கற்றலில் கிடைக்கும்
கல்வியோடு பயணிக்கும்
பற்றை உருவாக்கும்
பலர்முன் நடையிடும்

அயராத முயற்சி
அளிக்கும் ஆளுமை
தேயாத நிலவாய்
தோன்றி இருக்கும்

உயர்ச்சியின் உச்சத்தைக்
உன்னிடம் காட்டும்
புகழொரு பூதக்கண்ணாடி
புத்தியின் புதுமைக்கண்ணாடி

மதிப்பைக் கொடுக்கும்
மாயம் செய்யும்
மதியின் கொடையாய்
மங்காது ஜொலிக்கும்

தரையில் கிடந்தவரையும்
தரத்தில் உயர்த்தும்
வரையறை இல்லாத
வாகை சூடும்

பெருமை அளிக்கும்
பொறுப்பைக் கொடுக்கும்
அருமையான ஆற்றலையும்
அள்ளி வழங்கும்

வானத்தைத் தொட்டாலும்
வஞ்சம் கொள்ளாதே
குணத்தால் எப்போதும்
குன்றாக உயரு

உயருகையில் வாழ்த்தும்
உலகம் உன்னை
தயவின்றி வீழுகையில்
தன்னமின்றித் தூற்றும்

எப்போதும் புகழ் ஒரு
பூதக்கண்ணாடி
புரிந்து அறிந்து
கர்வத்தைத் தவிர்த்திடு

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# பரிதிமாற்கலைஞர்

தமிழறிஞர்! நூலாசான்! தனித்தமிழியக்க முதல்வர்!
செந்தமிழ்நடை பேச்செழுத்து! நாடகத்திறன்! தாமோதரனார்
"திராவிடசாஸ் திரி"யென்றே சிறப்பிப்பு! சபாபதிபால்
மாப்பற்று! நிறுவிட்டார் "செந்தமிழுரை சங்க"த்தை!
மாணவப்பரு வத்திலேயே "விவேகசிந்தா மணிப்பத்ரிகை"
கட்டுரைகள் யாத்தபுலமை! இளவயதில் கற்றிட்டார்
தமிழ்,கணிதம் சமஸ்கிருதம் வடமொழியும் தமிழிலக்கிய
இலக்கணமே! மதுரைசார் விளாச்சேரி கோவிந்தசிவன்
நற்றுணையாம் மாண்லட்சுமி நன்மகவாய்த் தோன்றினரே!
ஆயிரத்து எண்ணூற்று ஏழ்பத்தின் ஜூலைசார்
ஆறதனில் பிறந்திட்டார்! சூரியநா ராயணசாஸ்
திரிபேரார்! தந்தைதான் கற்பித்தார் சமஸ்கிருதமே!
மதுரைசேர் சபாபதியார் தமிழிலக்கிய இலக்கணத்தைப்
புகட்டினாரே! சென்னைதன் சீர்கிருத்துவக் கலாசாலை
தமிழ்மொழித்துறை மெய்யியலில் மாநிலத்தில் முதன்மையே!
தூயதமிழ் பற்றாலே பரிதிமாற்கலை ஞராயானாரே!
இவர்யாத்த தனிப்பாசுரத் தொகைதன்னை போப்பேரார்
ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்! தமிழுயர்தனிச் செம்மொழிப்பேர்
முழக்கத்தை முன்னம்முன்னம் எழுப்பிட்ட பெருமகனார்!
யாத்திட்ட நூல்களெண்ணில் பதின்மூன்றின் மிக்கவையே!
பதிப்பித்தார் ஐந்துக்கும் மேலமைந்த நூற்களையே!
தமிழகத்துக் கழகவரசு நூல்களினை நாட்டுடைமை
ஆக்கிட்டே பதின்மூன்று பரிவுத்தொகை மரபுரிமை
பத்தொன்பது பேர்தேர்ந்து பதினைந்து லட்சத்தை
வழங்கியதே! வாழ்ந்தஇல்லை நினைவில்லம் ஆக்கினரே!
பிறந்தநாளை ஆண்டாண்டு நிகழ்த்துகின்றார் அவ்விடத்தே!
என்புருக்கி நோயாலே ஆயிரத்துத் தொளாயிரத்து
மூன்றதனின் நவம்பரிலே இரண்டாவது தேதிதனில்
முப்பத்து மூன்றுவயது மூன்றுமாத இருபதாறு
நாள்வாழ்ந் திருந்தாரே! அவரிலக்கு காண்போமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# இயற்கை அழகு

காலை நேரம் அழகாகவும்
இளம் குயில்களின் சத்தம் இனிமையாகவும்
வாசலில் கோலம் புதுமையாகவும்
பூக்கள் மலர்ந்தது கண்ணுக்கு விருந்தாகவும்
இலையில் பனித்துளி முத்தாகவும்
முழு மதியின் தோழன் கதிரவன் உதயமாகவும்
இதயம் லேசாகவும்
நினைவுகள் அழகாகவும்
எண்ணங்கள் ஓட்டமாகவும்
இந்த நாள் இனிய நாள் என்ற எண்ணம் புதிதாகவும்
பல அதிசயங்கள் சூழ்ந்த இந்த உலகமாகவும்
உலகத்தில் நான் இருப்பது அழகாகவும்
இயற்கை காற்று மழை வானம் பூமி நீர் என்ற
ஒவ்வொன்றும் நமக்குத் துணையாகவும்
அதன் தேவை அதிகமாகவும்
பார்த்து வியந்த நினைவுகள்
பழகத் துடிக்கும் உறவுகள்
பேசாத சில மௌனங்கள்
தொலைத்த சில நட்புகள்
புதிதாய் வந்த சொந்தங்கள்
எல்லாமே அழகான இன்பங்கள்



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# திருஞானசம்பந்தர் சுவாமிகள் புராணம்

## (பாகம் நான்கு)

திருநாவுக்கரசரும் சம்பந்தரும் திருமறைக்காடு வந்தார்கள்
தெருவெல்லாம் வாத்தியங்கள் ஒலி ஊர் முழுதும் கேட்டது
திருமறைக்காட்டில் அரகர அரகர ஓசை விண்ணை முட்டியது
பெரியவரும் சிறியவரும் திருக்கோயில் வாசல் வந்தார்கள்.

இருவரும் கோயில் திருக்காப்பிட்ட கதவின் முன் நின்றார்கள்
அரு மறைகள் ஓதி சாத்தப்பட்டக் கதவு திறக்க வாய்ப்பில்லை
திருக்கோயில் தெற்குப் பக்கம் வாசல் வைத்து வழிபட்டார்கள்
தெரு வழியாக சுற்றி வந்துதான் கோயிலினுள் நுழைய முடியும்

ஆவுடைப் பிள்ளையார் திருநாவுக்கரசரிடம் இறைஞ்சி நின்றார்
"மேவுடன் தமிழப் பதிகம் பாடி மூடப்பட்டக் கதவை திறக்கலாமே"
பாலகன் சொன்ன சொல் கேட்டு கதவு திறக்க பதிகம் பாடினார்
ஆவலுடன் பாடப் பாட பத்தாவது பதிகம், திருக்கதவும் திறந்தது

"பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செயம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே"

மற்றது கண்ட சம்பந்தர் அப்பரின் அடிதொழுது வணங்கினார்
அற்புதமான வாயிலைக் கடந்து சென்று ஈசனைக் கண்டனர்
கொற்றவர் கோயில் வாயில் நேர்வழி வந்து மனம் உருகினர்
அற்றைநாள் கதவு மூட பாடும்படி கேட்க பிள்ளை பாடினார்

"சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள் செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே"

பெரியவரின் பத்து செந்தமிழ் பதிகம் பாட கதவு திறந்தது
சிறியவரின் முதல் செந்தமிழ் பதிகத்தில் கதவு மூடியது
அரிதான இந்நிகழ்வு நடந்த திருத்தலம் வேதாரண்யம்
திருக்கதவு மூடவும் திறக்கவும் இருப்பதை இன்றும் காணலாம்

பாண்டியன் நெடுமாறன் மங்கையர்கரசியை மணந்தான்
தூண்டியபடி மன்னன் சைவசமயத்தை விட்டு சமணனானான்
வேண்டிய தெய்வத்தை வணங்கும் உரிமையை இழந்தனர்
தோண்டியில் நீர் இறைத்து வயல் விளைச்சல் காணுமா?

மங்கை தவித்தாள். மூடிய ஆலயங்களில் வழிபாடு எப்படி?
சிங்கமான அமைச்சர் குலச்சிறையாரோடு ஆலோசனை
எங்கும் சிவமயம் ஒலிக்க ஞான சம்பந்தர் தான் ஒரே வழி
தங்கியிருக்கும் திருமறைக்காடு வந்தனர், அழைத்தனர்.




சம்பந்தர் சம்மதித்தார், மன்னன் வெப்பு நோயால் அவதி
இம்மியும் நகரமுடியாமல் வெப்பின் தணலில் கதறினான்
எம்பெருமான் அவன் மேனியில் நீறுபூச நோய்மறைந்தது
சிம்மாசனம் ஏறியது மதுரையில் மீண்டும் சைவ சமயம்.

தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# அவன் உரையாடலில்

நான் எதை எதையோ நினைத்துக் கொண்டு வரும் போது
அவளின் சிறு புன்னகையின் வழியே வந்தது
"என்னாச்சு " என்ற அந்த ஒற்றை வார்த்தை.

நினைத்தது எல்லாம் நிமிடமுள் கூட
தோற்றுப் போகும் அளவிற்கு மறந்தேனே.

நான் சொன்ன சிறு கவிதையை கூட "பயங்கரம் " என்ற
வார்த்தையை பயன்படுத்தி பூகம்பமாய் அதிர வைத்திடுவாள்.

அவளை நகைச்சுவையாய் பேசினால் போதும்
அவளிடமிருந்து வரும் அடுத்த வார்த்தையோ பின்
விளைவுகளுக்கு தாயாரக இரு என்றே சொல்லாமலே
சொல்லிடுவாள் "இருக்கட்டும் இருக்கட்டும்" என்ற
வார்த்தையில் எச்சரிக்கையாய்.



அவளிடம் இருந்து மட்டும் தப்பிடவே முடியாது.
பேசிய வார்த்தைகளை எல்லாம் கணக்குப் போட்டு
வைத்திருப்பாள்.

ஏதோ கணக்கு பிள்ள வீட்டு மகள் மாறியே!

மாற்றி மட்டும் பேசி பார், அடுத்த நொடியே.

அவளிடமிருந்து வரும் வார்தைதையோ பச்ச பொய்... பச்ச
பொய்... பச்ச பொய்...
மூன்று முறை மூச்சுவிடாமல் சொல்லிடுவாள்.
கோவில் பூசாரி போல.

கோவில் பூசாரியைப் போலவே பிரசாதமும் கொடுத்திடுவாள்
அளவு குறையாமலே.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# முதுமை

முதுமை ஓர்வரம்! முதுமையை அடையுமுன்னே
கதைமுடிந்தால் கொடுமை!முதுமையை மனத்தால்
ஏற்க இயலாததெனினும் தவிர்க்க இயலாதது!
வறுமை, தனிமை, வாட்டிடும் நோய்களுடன்
தனிமரமாய் இவ்வுலகில் வாழ்வதும் கொடுமை!
இளமைக்கு முரணாக இருந்திடும் முதுமை!
வெல்ல வேண்டும் முதுமையினை என்றெண்ணம்
உள்ளத்தில் குடிகொண்டால் உண்டாகும் நன்மை!
நடைதளரும், உடல் மெலியும்,நினைவுகள் தடுமாறும்!
தள்ளாத வயதென்று உள்ளம் உடைந்து
இல்லை நமக்கு இனியெதுவும் இவ்வுலகில்
என்றெண்ணம் உருவானால் உதறித் தள்ளுங்கள்!
இன்று புதிதாய்ப் பிறந்ததாய் எண்ணுங்கள்!
மனங்கவர்ந் தோருடனே மகிழ்ந்து உரையாடுங்கள்!
ஆன்மிகத் தலங்களுக்கு அடிக்கடி செல்லுங்கள்!
மனமகிழ்வைத் தருகின்ற செயல்களையே செய்யுங்கள்!
எண்ணிய எண்ணியாங்கு எய்திய அனுபவத்தை
எண்ணி மகிழுங்கள்! சுகமான அனுபங்கள்!
கடந்தகால கசப்புகளை அசைபோடல் தவிருங்கள்!
உடலளவில் மாற்றங்கள் உருவாதல் இயற்கை!
உடல்நலன் பேணுதற்கு முன்னுரிமை தாருங்கள்!
அளவான உணவும் எளிய பயிற்சிகளும்
அளப்பரிய நன்மைகளை அளித்திடும் முதுமையிலும்!
இணையம், திறன்பேசி இயக்கத்தை அறிந்திடுங்கள்!
மகன்,மகள் குடும்பத்திற்கு மனமுவந்து உதவிடுங்கள்!
கூட்டுக் குடும்பமுறை சிதைந்துவிட்ட காரணத்தால்
இடர்கள் பலவுண்டு! ஏற்றிருப்போர் பலருண்டு!
முதியோரின் அனுபவங்கள், அறிவுரைகள் நல்லமுதம்!
இளைய தலைமுறைகள் முதுமை நமக்கும்
நாளைவரும் என்றுணர்ந்து முதியோரைப் பேணிடுவோம்!



**கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி**

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# தமிழறிஞர் க.வெள்ளை வாரணனார்

கட்டுரை

## பிறப்பு வளர்ப்பு



தஞ்சை மாவட்டம் குடந்தை அருகிலுள்ள திருநாகேசுவரத்தில் கந்தசாமி முதலியார் - அமிர்தம் அம்மையார் தம்பதியருக்கு 1917ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் இளமைக் கல்வியை திருநாகேசுவரத்தில் கற்ற பின்பு திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் மாணாக்கராகச் சேர்ந்து திருமுறைகளை இசையோடு கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் படிப்பில் சேர்ந்து 1935 இல் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1935-37 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து, 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு' என்னும் ஆய்வேட்டினை எழுதி முடித்தார்.வெள்ளைவாரணனார் 1938 முதல் 1943 வரை தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1939 ஆம் ஆண்டு பொற்றடங்கண்ணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

## பணி

1943 இல் வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.
1962 இல் இவரின் புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக்கழகம் இவருக்கு இணைப்பேராசிரியர் பதவி வழங்கியது.
1977 ஆம் ஆண்டு துறைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். பல்கலைக்கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தம் 62 இம் வயது வரை அங்குப் பணியாற்றி 1979 இல் ஓய்வு பெற்றார்.
1979 முதல் 1982 ஆம் ஆண்டு வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றினார்.

# தமிழறிஞர் க.வெள்ளை வாரணனார்


கட்டுரை

## நூல்கள்

விபுலானந்தரின் யாழ் நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை இவரின் இசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. வெள்ளைவாரணனார் எழுதிய நூல்கள் சில

இலக்கண நூல்கள்

- தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்
- தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்
- தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம்
- தொல் - பொருள் உரைவளம் (ஏழு தொகுதிகள்)
- சங்க இலக்கியம் சார்ந்த நூல்கள்
- குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி
- சங்ககால தமிழ் மக்கள்
- சைவ சமயம் சார்ந்த நூல்கள்
- திருவுந்தியார்
- திருக்களிற்றுப்படியார்
- சேக்கிழார் நூல்நயம்
- பன்னிரு திருமுறை வரலாறு
- தில்லைப் பெருங்கோயில் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை




## உரை நூல்கள்

- தேவார அருள்முறைத் திரட்டுரை
- திருமந்திர அருள்முறைத் திரட்டுரை
- திருவருட்பயன் விளக்கவுரை

## பிற

காக்கை விடு தூது என்னும் படைப்பிலக்கியத்தையும்,இசைத்தமிழ், நாடகத்தமிழ் சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். இவரது நூல்களுள் சில நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

## நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

- அற்புதத் திருவந்தாதி
- இசைத்தமிழ்

# தமிழறிஞர் க.வெள்ளை வாரணனார்

## கட்டுரை

### நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்




- காக்கை விடு தூது
- பன்னிரு திருமுறை வரலாறு
- பன்னிரு திருமுறை வரலாறு - இரண்டாம் பகுதி
- சைவ சித்தாந்த சாத்திர வரலாறு
- சங்ககாலத் தமிழ் மக்கள்
- தில்லைப் பெருங்கோயில் வரலாறு
- திருமந்திர அருள்முறைத் திரட்டு
- திருத்தொண்டர் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை
- திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்
- தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு
- தொல்காப்பியம் களவியல் உரைவளம்
- தொல்காப்பியம் கற்பியல் உரைவளம்
- தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்
- தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம்
- தொல்காப்பியம் நன்னூல் - சொல்லதிகாரம்
- தொல்காப்பியம் பொருளியல் உரைவளம்
- தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்
- தொல்காப்பியம் உவமையியல் உரைவளம்
- தொல்காப்பியம் வரலாறு
- திருவருட் பயன்
- தொல்காப்பியம்-செய்யுளியல் உரைவளம்
- தொல்காப்பியம்-மரபியல்-உரைவளம்
- கவிதை நூல்கள்.

### விருதுகள்

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

- சித்தாந்தச் செம்மல்
- திருமுறை உரைமணி
- தமிழ்மாமணி
- தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
- செந்தமிழ்ச் சான்றோர்
- சிவகவிமணி

## விருதுகள்


தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

- சித்தாந்தச் செம்மல்
- திருமுறை உரைமணி
- தமிழ்மாமணி
- திருமுறைத் தெய்வமணி
- தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
- செந்தமிழ்ச் சான்றோர்
- சிவகவிமணி
- தமிழ்ப் பேரவைச் செம்மல்

ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் இவருக்கு வழங்கப்பட்டன.

## மறைவு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது உடல் நலம் குன்றியது. எனவே தில்லை சென்று தங்கி வாழ்ந்திருந்த வெள்ளைவாரணனார் 1988 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.




நன்றி : https://senguntharmudaliarhistory.blogspot.com
https://www.tamilvu.org/library/nationalized


அகர முதல நாளை நமதே
அகர முதல உரக்க சொல்வோம்
வார்த்தைகளில்
உண்மை இல்லையேனில்
எண்ணங்களில்
தூய்மை இருக்காது
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com